# இருநூறுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை சிறுவர் பூங்கா புனரமைப்பு

மட்டக்களப்பு மேற்கில் உள்ள இருநூறுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 24 மாணவர்களை மாத்திரம் கொண்டுள்ள ஓர் எல்லைப்புறக் கிராம ஆரம்ப பாடசாலை. அதன் அதிபர் திரு பிரபாகரன் யூலை 2022 இல் ஓராயம் அமையத்திடம் அப் பாடசாலையில் உள்ள சிறுவர் பூங்காவினை புனரமைப்பு செய்து தரும்படி கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அச் செயற்திட்டத்திற்கான முன்மதிப்பீட்டையும் (ரூபா 139,350), பூங்காவின் தற்போதைய படங்களையும் அனுப்பியிருந்தார்.

ஓராயம் அமையம், மட்டக்களப்பு மேற்குக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியமுடன் தொடர்பு கொண்டு, இதற்குரிய தேவை, அரசாங்கப் பணஉதவி பெறக்கூடிய சாத்தியம் என்பன பற்றி விசாரித்த பின்னர் நிதி உதவி செய்ய முடிவெடுத்தது.

இதைத் தொடர்ந்து, அதிபர் செயற்திட்டத்திற்கான கால அட்டவணையை அனுப்பியதுடன் அவ் அட்டவணையின்படியே ஒத்தோபர் 2022 இல், மூன்று மாத காலத்தினுள்ளேயே திட்டவேலைகளை முடித்துள்ளார்.

இத் திட்ட வேலைகளில் அங்குள்ள மக்கள் நேரடியாகப் பங்குபற்றிய படங்களையும், திட்ட முடிவில் பூங்காவில் சிறுவர்கள் விளையாடும் படங்களையும் அதிபர் அனுப்பியுள்ளார்.

திட்டச் செலவும் (ரூபா 113,540) முன்மதிப்பீட்டை (ரூபா 139,350) விடக் குறைவாகவே உள்ளமையும் கவனிக்கத்தக்கது.

இவ் வேலைத்திட்டம் சிறிதாக இருந்தாலும் ஆவணப்படுத்தல், திட்டமிட்ட காலத்துக்குள் வேலையை நிறைவு செய்தல், செலவுக் கட்டுப்பாடு எனும் அம்சங்கள் சிறந்த முறையில் அமைந்தமையும், அதிபரின் ஒத்துழைப்பும், மக்களின் பங்களிப்பும் சிலாகிக்கப்படத்தக்கன.

13.11.2022